10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 118 வியாழக்கிழமை செப்ரெம்பர் 14 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதல் நிதி

பாதுகாப்பு அமைச்சுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செலவுகளுக்காக 158.83 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் 06

### ஐ.நா தீர்மானங்களை நிறைவேற்றுவதில்

# இலங்கை தோல்வி!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பெருமளவில் தோல்விடைந்துள்ளதாகத் தெரிவித்திருக்கும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் மனித உரிமைகள் தொடர்பாக மொழியால் பேசுவதை விட, அதிகமாகச் செய்ய முடியும் என்பதை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டும்." என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்காகப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி, இலங்கை விடயத்தில், பல்வேறு நல்லிணக்கப் பணியகங்களை அமைப்பதும், முன்னேற்றங்கள் பற்றிப் பேசுவதும், தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணையானது அல்ல, என்ற விடயத்தில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உள்ள அரசாங்கங்கள், தெளிவாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை "நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தீர்மானம் முழுமையான நடைமுறைப்படுத்தப்படுவதைக் காண வேண்டிய தேவை உள்ளது. நீதி கிடைப்பதற்கான ஆதாரங்களை அவர்கள் காண வேண்டும். 2015ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான தீர்மானத்தின் இலக்குகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (எ)

### யாழ், கிளிநொச்சியில்

# தற்கொலை அதிகரிப்பு

**ஆய்வில் அதிர்ச்சி**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை, வருடாவருடம் அதிகரித்துச் செல்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இரு மாவட்டங்களிலும் 2009ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 124 ஆகும். 2010ஆம் ஆண்டு 137 பேரும், 2011ஆம் ஆண்டு 141 பேரும், 2012ஆம் ஆண்டு 153 பேரும், 2013ஆம் ஆண்டு 158 பேரும், 2014ஆம் ஆண்டு 157 பேரும், 2015ஆம் ஆண்டு 139 பேரும் 2016ஆம் ஆண்டு 179 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இதேவேளை, இவ்வாண்டு ஜூலை 31ஆம் 06

### மன்னாரில் திருச்சொரூபம்

## விசமிகளால் சேதம்



மன்னாரில் மீண்டும் திருச் சொரூபம் ஒன்று இன்று அதிகாலை விசமிகளால் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 06

# முடிவுகள் எடுக்க முன் கூட்டத்தைக் கூட்டுங்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில்,





"நாடாளுமன்றக் குழுக் கூட்டம் தொடர்பான உங்களது அறிவித்தல் கடிதம் கிடைத்தது. அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாகவும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு புதிய அரசியல் யாப்பு வரவிருக்கின்ற சூழலில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் 20ஆவது திருத்தம் மற்றும் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை ஆகியவை 06

### பல்கலை மாணவர் கொலை வழக்கு

# பொலிஸாருக்கு பிணை!

யாழ்.பல்கலைகழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களுக்குப் பிணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்ட வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் போது சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி , கடந்த 11 மாத காலமாக விளக்கமறியலில் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி, 06

### காணாமல் போனோர் பணியகத்துக்கு

# நம்பகமானவர்களை நியமிக்கக் கோரிக்கை

காணாமல் போனோர் பணியகத்தை உருவாக்கும் இலங்கை, இந்தப் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று மேற்குலக நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தமது கருத்துக்களை வெளியிட்டுவருகின்றன. காணாமல் போனோர் பணியகத்தைச் செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் செயற்படுத்தும், வர்த்தமானி அறிவிப்பை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் 06



### பிரிட்டனில் ஒலித்தது போர்க்குற்ற விவகாரம்

முன்னாள் இராணுவத் தளபதி ஜனரல் ஜகத் ஜயசூரிய போர்க் குற்றத்தில் ஈடுபட்டதாக அமைச்சரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியிருந்தார். அது தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கருத்தாடல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

புலம்பெயர்ந்த அமைப்பு ஒன்றினால் கடந்த வாரம் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் 06

# வேலை நிறுத்தத்தால் மின்சாரம் தடங்கல்

மின்சார சபை ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் காரணமாக, நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட மின் தடையை வழமைக்குக் கொண்டுவர முடியாதுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சில கோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்று நண்பகல் 12.00 மணி முதல் 48 மணித்தியால வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர். இதனால், நாட்டின் சில பகுதிகளில் மின் தடை ஏற்பட்டுள்ளதாக, இலங்கை மின் சேவையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் குறிப்பிட்டுள்ளார். நாளை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கவில்லையாயின், தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் தீர்வு வழங்க இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் இதுபோன்ற, வேலை நிறுத்தங்கள் அநீதியானது என மின் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு கூறியுள்ளது. (உ)



# பிணை குறித்து விளக்கமளிக்க உத்தரவு



சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்குப் பிணை வழங்குவது சம்பந்தமாக விளக்கமளிக்குமாறு சட்ட மா அதிபருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி இது தொடர்பில் நீதிமன்றத்தில் விளக்கமளிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதிலக உத்தரவிட்டுள்ளார். (உ)

# போதைப் பொருளுடன் இருவர் கைது



35 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைத் தம்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் கிரேன்பாஸ், வதுல்லவல்ல பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கிரேன்பாஸ் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரேன்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை 08 கிராமும் 120 மில்லி கிராம் அளவு ஹெரோயின் வைத்திருந்த மற்றொருவர் றத்மலானைப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். றத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

# புகைத்தல் பாவனை 46 வீதம் வீழ்ச்சி



"புகைப்பொருட்கள் மீதான வரிவிதிப்பால், இந்த நாட்டில் தற்போதைக்கு 46 சதவீதத்தால் புகைத்தல் குறைந்துள்ளது" என்று, சுகாதாரம் ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

"புகைத்தல் பாவனையை இன்னுமின்னும் குறைப்பதற்காகப் பாடசாலைகளுக்கு அண்மையில், புகைப்பொருள்கள் விற்பனை செய்வதை தடைசெய்தல், தனியான புகைப்பொருள் விற்பனையைத் தடைசெய்தல், வெள்ளை நிறத்திலான புகைப்பொருள் பக்கெட்டை அறிமுகம் செய்தல், உள்ளிட்ட சட்டங்களை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"இதேவேளை, 2020ஆம் ஆண்டில், புகைப்பொருள் உற்பத்தியை நாட்டிலிருந்து முற்றாக தடைசெய்வதற்கு, அரசாங்கம் கொள்கையளவில் தீர்மானித்துள்ளது. அந்த தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு, புகைப்பொருள் நிறுவனங்களும் தீர்மானித்துள்ளன" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ)

# மணிவிழா

சாவகச்சேரி டிபேர்க் கல்லூரியின் தமிழ் ஆசிரியரும், தென்மராட்சி இலக்கிய அணி உறுப்பினருமான ச.மார்க்கண்டு ஆசிரியரின் மணி விழா நாளை மறுநாள் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் மாலை 4மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க்கோட்ட மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மணி விழாவைத் தொடர்ந்து "இன்றைய ஆசிரியத்தின் அவசியத் தேவை? "அன்பே!, அறமே! எனும் தொனிப் பொருளில் கம்பவாரதி இ.ஜெயராஜ் தலைமையில் சிறப்புப் பட்டிமண்டபமும் இடம்பெறவுள்ளது. (உ)

# அபிவிருத்தி லொத்தர் சபைக்கு புதிய தலைவர் நியமனம்

எஸ்.ஏ.பி.சூரியப்பெரும அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளராகப் பதவிவகித்த ரொமேஷ் ஜெயவர்த்தன கடந்த வாரம் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். அந்நிலையிலேயே புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

# ஊடகவியலாளர் வீட்டில் 40 பவுண் நகைகள் கொள்ளை

உடுப்பிட்டியில் ஊடகவியலாளர்வீட்டினுள் உள்நுழைந்த திருடர்கள் 40 பவுண் தங்க நகைகளை திருடிச்சென்றுள்ளனர். வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பகுதியில் வசிக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளரான இரட்ணம்தயாபரனின் வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்று உள்ளது.

வீட்டிலிருந்து கணவன் மனைவி வேலைக்குச் சென்றிருந்தனர். பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றிருந்தனர். மதிய நேரம் வீட்டில் எவரும் இல்லாத நேரத்தைப் பயன்படுத்திய கொள்ளையர்கள் வீட்டு வளவுக்குள் சென்று வீட்டின் ஜன்னல் கம்பிகளை வளைத்து அதனூடாக உட்சென்று நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (உ)



# கடற்படைத் தளபதி பேராயருடன் சந்திப்பு



கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னய்யா கொழும்பு பேராயர் கார்டினல் மல்கம் ரஞ்சித் அருட்தந்தையைச் சந்தித்தார்.

கொழும்பிலுள்ள பேராயர் அவர்களது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் இருவருக்குமிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது பேராயர் கடற்படைத் தளபதி உள்ளிட்ட அனைத்து கடற்படையினருக்கும் தனது ஆசீர்வாதத்தை வழங்கினார். இந்தச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் கடற்படைத் தளபதி பேராயர் கார்டினல் ரஞ்சித் அருட்தந்தைக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். (உ)

# வறட்சி நிவாரணம்

மட்டக்களப்பு, வவுணதீவு (மண்முனை மேற்கு ) பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் முதலாம் கட்ட நிவாரணமாக குறித்த மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால், வவுணதீவுப் பிரதேசத்தின் 14 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 1713 குடும்பங்களுக்கு வவுணதீவு பிரதேச செயலகம் ஊடாக இந்த நிவாரணங்கள் கையளிக்கப்பட்டன. (உ)






## நவாஸ் பதவி பறிப்பு:
# எதிர்த்து முறையீடு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து அவரது குடும்பத்தினர் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை விசாரிக்க அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் ஒப்புக் கொண்டது.
நவாஸ் ஷெரீப் மீதான பனாமா ஊழல் புகார் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்துமாறு உச்ச நீதிமன்றம் கடந்த ஜூலை 28 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. எம்.பி. பதவியிலிருந்தும் தகுதி நீக்கம் செய்ததால் அவர் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.
சட்டத்தின் பல்வேறு பிரிவுகளை மீறும் வகையில் தீர்ப்பு அமைந்திருப்பதால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி, நவாஸ் ஷெரீப்பும், அவரது குடும்பத்தினரும் தனித்தனியாக மனுத் தாக்கல் செய்தனர்.
இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், மறு ஆய்வு மனுவை விசாரிக்க 5 நீதிபதிகள் கொண்ட அமர்வை அமைக்குமாறு தலைமை நீதிபதிக்கு வேண்டு கோள் வைக்கப்படும் என்றனர். பின்னர் வழக்கை புதன்கிழமைக்கு ஒத்தி வைத்தனர். (இ)

# மலேசியாவில் தீ விபத்து

## 25 மாணவர்கள் சாவு

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள பாடசாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.
மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் டேடக் கெராமத் என்கிற இடத்தில், தருல் குர்ஆன் இட்டிஃப்பா கியா என்கிற பாடசாலை செயற்பட்டு வருகிறது. இந்தப் பாடசாலையில் இன்று அதிகாலை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. பாடசாலையின் விடுதியில் பரவிய தீயால் பல மாணவர்கள் அதனுள் சிக்குண்டனர். எனினும் பெரும் போராட்டத்தின் மத்தியில் அவர்கள் மீட்டெடுக்கப்பட்டனர். ஆயினும் இந்த விபத்தில் சிக்கி 25 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை கோலாலம்பூர் தீயணைப்பு மீட்புத் துறை உறுதிபடுத்தியுள்ளது. தீ கொளுந்துவிட்டு எரியும்போது ஏற்பட்ட அதிகப்படியான புகையால்தான் மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்ததாகத் தெரியவந்துள்ளது.
"இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. கடந்த 20 ஆண்டுகளில் மலேசியாவில் ஏற்பட்ட தீ விபத்துகளில் இதுவே மிக மோசமான தீ விபத்து . இந்த நிகழ்வு எனக்கு மிகுந்த மனவேதனை அளிக்கின்றது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள் " என்று மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் தெரிவித்துள்ளார். (இ)



# மல்லையா ஆஜர்

மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தொழிலதிபர் விஜய் மல்லையா, இந்திய அரசு தொடர்ந்த வழக்கில், லண்டன் நீதிமன்றத்தில் இன்று ஆஜரானார்.
பல ஆயிரம் கோடி ரூபாவை வங்கியில் கடனாக வாங்கி விட்டு, திரும்பச் செலுத்தாமல் பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா தலைமறைவாக லண்டனில் வசித்து வருகிறார். அவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று பிரிட்டன் அரசுக்கு இந்திய மத்திய அரசு கோரிக்கை விடுத்தது. இந்த வழக்கு லண்டன் நீதிமன்றில் இன்று நடந்தது. இதன்போது தனது தரப்பு நியாயங்களை விஜய் மல்லையா, நீதிமன்றில் எடுத்துரைத்தார். அதன் பின்னர் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.(இ)


# போலித் திருமணக் கும்பல் சிக்கியது

ஜேர்மனியில் ஐரோப்பிய ஒன்றிய வதிவிடம் பெறுவதற்காக போலித் திருமணம் செய்துகொண்ட கும்பல் ஒன்றைப் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். குறித்த விவகாரம் தொடர்பில் தலைநகர் பெர்லின் முழுதையும் 40 பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட பொலிஸார் 4 பெண்கள் உள்ளிட்ட 5 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.
இந்தக் கும்பல் போர்த்துகல் நாட்டில் இருந்து பெண்களை வரவழைத்து இந்தப் போலி திருமணத்துக்குப் பயன்படுத்தியுள்ளது எனப் பொலிஸ் தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது. இவர்கள் ஐரோப்பாவைச் சேர்ந்த பெண்களை பணம் கொடுத்து அழைத்து வந்து, ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஆண்களுக்குப் போலித் திருமணம் செய்து வைக்கின்றனர். பின்னர் அந்த ஆண்களுக்கு ஐரோப்பியக் குடியுரிமை கிடைத்து விடும்,. அவர்களுடன் போலித் திருமணம் செய்த, பெண்கள் அதன் பின்னர் தத்தம் பாட்டில் சென்று விடுவர்.
இப்படி ஒரு போலித் திருமணத்தின் மூலம், ஐரோப்பியக் குடியுரிமையைப் பெற்றுக் கொடுக்க ஆபிரிக்க ஆண்களிடமிருந்து 13 ஆயிரம் யூரோ வரை இந்தக் கும்பல் அறவிட்டுள்ளது.
தற்போது சிக்கியுள்ள கும்பலிடம் இருந்து புகைப்படங்கள், செல்போன், மற்றும் போலிச் சான்றிதழ்கள், 300,000 யூரோ பணம் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.இதுபோன்ற கும்பல்களின் நடவடிக்கைகளால் இனி ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளைச் ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்குத் தஞ்சமளிப்பது என்பது மிகவும் கடினமான விடயமாக மாறியுள்ளது. (இ)

# பேரம் பேசும் பொலிஸ்

## தினகரன் குற்றச்சாட்டு

'20 கோடி ரூபா தருகிறோம் ஒத்துப் போகவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் தனக்கு ஆதரவான எம்.எல்.ஏக்களுக்கு, தமிழகப் பொலிஸார் மிரட்டல் விடுத்திருப்பதாக டி.டி.வி. தினகரன் கூறினார்.
"கர்நாடக மாநிலம் குடகு மாவட்டத்தில் உள்ள சொகுசு விடுதியில் தங்கியிருக்கும் எனது ஆதரவு எம்.எல்.ஏ.க்களை தமிழகப் பொலிஸார் சந்தித்து பேசியிருக்கிறார்கள். அப்போது முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசுக்கு மட்டுமே ஆதரவு அளிக்கவேண்டும் என்றும், எம்.எல்.ஏ.க்களுக்கு தலா 20 கோடி ரூபா வரை தருகிறோம் என்றும் ஆசை வார்த்தை கூறியிருக்கின்றனர். இதற்கு ஒத்துப்போகாத எம்.எல்.ஏ.க்கள் மீது வழக்குப்பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டியும் உள்ளனர்.
எம்.எல்.ஏ.க்களை மிரட்டிய பொலிஸார் மீதும்,முதலமைச்சர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி நீதிமன்றத்தை நாட உள்ளோம்" என்று தினகரன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். (இ)





# ஒன்று திரளுங்கள்!

## ஸ்டாலின் அறைகூவல்

'தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமெனில் தமிழக மக்கள் அனைவரும் திமுகவுடன் ஒன்றுதிரள வேண்டும்' என்று திமுக செயல் தலைவர் ஸ்டாலின் கூறியுள்ளார்.
நீட் தேர்வை எதிர்த்து திமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் சார்பில் தாம்பரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.
அதில் ஸ்டாலின் பேசியதாவது:
"தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இது மாணவர்களுக்குக்காக, நம்முடைய வருங்கால சந்ததியினருக்காக நடத்தப்படும் ஒரு போராட்டம்.
இன்றைக்குப் படமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் அனிதாவின் மரணத்துக்குப் பிறகும் அதிமுக அரசு வாய் திறக்கவில்லை என்றால் நாங்கள் இப்படிக் கேள்வி கேட்க மாட்டோமா?
நீட் தேர்வு மட்டுமா பிரச்சினை?
விவசாயிகள் பிரச்சினை, அரசு ஊழியர்கள் பிரச்சினை, ஆசிரியர்கள் போராட்டம், கதிராமங்கலத்தில் தொடர் போராட்டம், நெடுவாசலில் போராட்டம் என தமிழகமே போராட்ட பூமியாகிவிட்டது.
இந்த ஜனநாயக விரோத சிறுபான்மை அரசை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். தமிழக அரசின் பெரும்பான் மையை நிரூபிக்க எங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள், காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஆளுநரைச் சந்தித்து, பலமுறை கடிதம் அளித்துவிட்டோம். குடியரசுத் தலைவரிடத்திலும் வலியுறுத்தி விட்டோம்.பெரும்பான்மை இல்லாத ஆட்சியின் கீழ் ஒட்டுமொத்த தமிழக நிர்வாகமும் ஸ்தம்பித்திருக்கும் நிலையில், தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமெனில் தமிழக மக்கள் திமுகவுடன் ஒன்றுதிரள வேண்டும்" என்றார் ஸ்டாலின்.

# சிங்கப்பூரின் முதல்பெண் அதிபர்

சிங்கப்பூரின் முதல் பெண் அதிபராக, ஹலிமா யாகப் (வயது-63)போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
ஆசிய நாடான சிங்கப்பூரில், அதிபர் பதவிக்கான தேர்தல், இந்த மாதம் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. முதல் முறையாக, இந்தத் தேர்தலில், மலாய் பிரிவினர் மட்டுமே போட்டியிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.
மொத்தம், 55 லட்சம் மக்கள் தொகையுடைய சிங்கப்பூரின் அதிபர் பதவிக்கு, மூன்று பேர் போட்டியிட்டனர்.
இதில் சாலேஹ் மரிகன், பாரித் கான் ஆகியோரின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.
இதையடுத்து, முஸ்லிம் மலாய் பிரிவைச் சேர்ந்த, ஹலிமா யாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் சபாநாயகரான யாகப், நாட்டின் முதல் பெண் அதிபராகி உள்ளார். தேர்தல் நடத்தப்படாததுடன், , குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே அதிபர் பதவி ஒதுக்கப்பட்டதும் சிங்கப்பூரில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
இது குறித்து சமூகவலைத்தளங்களில் பலர் தங்கள் கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். (இ)






# பெரேரா, ஆம்லா ருத்திரதாண்டவம் வீழ்ந்தது பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது இருபது-20 போட்டியில், ஆம்லா மற்றும் பெரேராவின் அதிரடி ஆட்டதால் உலக லெவன் அணி வெற்றி பெற்றது.

டுபிளெசிஸ் தலைமையில் உலக லெவன் அணி, தற்போது பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, இருபது-20 தொடரில் விளையாடி வருகிறது.

பாகிஸ்தானின் கடாபி மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரின் முதலாவது போட்டியில், பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி நேற்று அதே மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்து களமிறங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர்களான பக்கார் சமான் மற்றும் ஷேஷாத் நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கபட்ட 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைச் சேர்த்தது. உலக லெவன் சார்பாக பத்ரீ, பெரேரா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.


175 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய உலக லெவன் அணியின் தொடக்க வீரர்களான, தமீம் இக்பால் மற்றும் ஆம்லா ஆகியோர் சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர். இக்பால் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் ஆம்லா தொடர்ந்து அதிரடியாக விளையாடினார். போட்டியின் கடைசி இரண்டு ஓவர்களில் 33 ஓட்டங்கள் தேவைப்பட, பெரேரா ருத்திரதாண்டவம் ஆடினார். 19ஆவது ஓவரில் இரண்டு சிக்ஸர்களைப் பறக்கவிட்ட அவர், கடைசி ஓவரிலும் சிக்ஸர் அடித்து, அந்த அணியை வெற்றி பெற வைத்தார். ஆம்லா 72 ஓட்டங்களும் பெரேரா 19 பந்துகளில் 47 ஓட்டங்களும் சேர்த்தனர்.

உலக லெவன் அணி, 19.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 175 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தப் போட்டியில் உலக லெவன் அணி வெற்றிபெற்றதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட தொடர் தற்போது, 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ளது.

தொடரின் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது போட்டி, நாளை நடைபெறவுள்ளது. (ஐ)

## ஷங்கருடன் இணையும் அஜித்





“விவேகம்” படத்தைத் தொடர்ந்து அஜித் நடிக்கவுள்ள படத்தை ஷங்கர் இயக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.


சிவா இயக்கத்தில் அஜித் நடிப்பில் வெளியாகியிருக்கும் படம் “விவேகம்”. விமர்சன ரீதியில் இப்படம் போதிய வரவேற்பைப் பெறவில்லை. மேலும், கையில் ஏற்பட்ட காயத்தால் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு ஓய்வெடுத்து வருகிறார் அஜித்.

இந்நிலையில் அஜித்தின் அடுத்த படம் குறித்து, பல்வேறு தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளன. தற்போது “2.0” படத்தைத் தொடர்ந்து ஷங்கர் இயக்கவுள்ள அடுத்த படத்தில் அஜித் நடிக்கவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனை ஏ.எம்.ரத்னம் தயாரிக்கவுள்ளார் எனவும், அனிருத் இசையமைக்கவுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

ஷங்கர் - அஜித் கூட்டணியை உருவாக்கியது தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம்தான். இருவருக்குமே நண்பர் என்பதால் இக்கூட்டணியை முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது.

மேலும், அஜித்தின் அடுத்த படத்தையும் சிவாவே இயக்கவிருப்பதாகவும், இதற்கான கதை விவாதம் தொடங்கி நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அஜித்தின் அடுத்த பட இயக்குநர் யார் என்பது அவருடைய ஓய்வுக்குப் பிறகு முடிவாகும் எனத் தெரிகிறது.

## மயிரிழையில் தப்பிய சனத்



ஆப்கானிஸ்தான் காபூல் நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலிருந்து இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும், தெரிவுக் குழு உறுப்பினருமான சனத் ஜயசூரிய மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

காபூலில் உள்ள கிரிக்கெட் மைதானத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பலர் பலியாகியிருந்தனர்.

சனத் ஜயசூரிய மற்றும் கிரேகம் லெபோய் இந்தக் கிரிக்கெட் மைதானத்துக்கு நேற்றுக் காலை விஜயம் செய்திருந்தனர்.

எனினும், குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெறுவதற்குச் சற்று நேரத்துக்கு முன்னரே இவர்கள் இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

ஆப்கானில் நடைபெறுகின்ற பிரீமியர் லீக் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆலோசகராக சனத் ஜயசூரிய கடமையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பிக்பாஸிடம் 3 கேள்விகள்

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் தொடர்ந்து சர்ச்சைகளுக்குப் பஞ்சமில்லாமல் சென்றுகொண்டிருக்கிறது. தற்போது இறுதிக்கட்டப் போட்டிகள் கடுமையாக நடந்து வருகின்றன.

இந்நிலையில் தற்போது நடிகை ஸ்ரீபிரியா பிக்பாஸை நேரில் சந்தித்து 3 கேள்விகள் கேட்க வேண்டும் எனக் கூறியுள்ளார். இதுவரை நடந்துள்ள நிகழ்வுகள் பற்றிய கேள்விகள் அது என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐபோன் X

ஐபோன் X என்பது இங்கு பத்தைக் குறிக்கிறது. இது தனது உரிமையாளரைக் கண்டறியும் பழைய கைரேகை முறையிலிருந்து மாற்றமடைந்து தற்போது முக அடையாள அமைப்பைப் பயன்படுத்தும் முறைக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கு faceID எனப் பெயரிட்டுள்ளது.

## கோலிக்காக இணைந்த இந்திய-பாகிஸ்தான் ரசிகர்கள்

இந்திய அணியின் தலைவர் கோலியை, ஆஸ்திரேலியப் பத்திரிகையாளர் ஒருவர் துப்புரவுப் பணியாளர் எனச் சீண்ட, அதற்கு இந்திய, பாகிஸ்தான் ரசிகர்கள் இணைந்து தக்க பதிலடிகொடுத்துள்ளனர்.

தற்போது பாகிஸ்தானில் அந்த அணிக்கு எதிராக, டுபிளெசிஸ் தலைமையில் உலக லெவன் அணி இருபது-20 தொடரில் பங்கேற்றுவருகிறது.

அதேவேளை, ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஒருநாள் மற்றும் இருபது-20 தொடர்களில் பங்கேற்கவுள்ளது.

இந்நிலையில், ஆஸ்திரேலியப் பத்திரிகையாளர் டென்னிஸ் பிரீட்மன் என்பவர், கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தைக் கோலி சுத்தப்படுத்தும் புகைப்படம் ஒன்றை ருவிட்டரில் பதிவிட்டு, “உலக லெவன் போட்டிக்காகத் துப்புரவுப் பணியாளர்கள் மைதானத்தைச் சுத்தப்படுத்துகிறார்கள்” என ருவீட் செய்ய, கோலி ரசிகர்கள் கொதித்துவிட்டனர்.

இந்திய, பாகிஸ்தான் ரசிகர்கள் ஒன்றாக இணைந்து, ஆஸ்திரேலியப் பத்திரிகையாளருக்கு ருவிட்டரில் தக்க பதிலடிகொடுத்து வருகின்றனர். பாகிஸ்தான் ரசிகர்கள், “நாங்கள் கோலி மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளோம். இதுபோன்ற விமர்சனங்களை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்திய வீரர்கள் பாகிஸ்தான் வந்து விளையாடுவதை ஆர்வமாக எதிர்நோக்கி உள்ளோம்” என்று கூறியுள்ளனர்.




இந்திய ரசிகர் ஒருவர், “அவர் வளர்ந்து வந்த இடத்தை அவர் சுத்தம்செய்கிறார். நீங்கள் உங்கள் மனதைச் சுத்தம் செய்யுங்கள்” என ருவீட் செய்துள்ளார்.

இதுபோன்று பல ரசிகர்களும் பல விதமாக அவர்களைத் திட்டித்தீர்த்துள்ளனர். டென்னிஸ் பிரீட்மன், இதுபோன்று இந்திய வீரர்களைப் பலமுறை சீண்டியுள்ளார். அவை அனைத்துக்கும் சேர்த்து, தற்போது ரசிகர்கள் தக்க பதிலடி கொடுத்துள்ளனர்.

உண்மையில், அந்தப் புகைப்படம் “தூய்மை இந்தியா” திட்டத்துக்காகக் கடந்த ஆண்டு காந்தி ஜெயந்தி அன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், கோலி உள்ளிட்ட இந்திய வீரர்கள் ஈடன் கார்டன் மைதானத்தைச் சுத்தம்செய்த போது எடுக்கப்பட்டது. (ஐ)

# மைத்திரிக்குப் பாராட்டு

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவல கத்தை ஸ்தாபிக்கும் வர்த்த மானி அறிவித்தலில் ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன கைச்சாத்திட்டமை தொடர்பில் பல தரப்புக்க ளும் பாராட்டுத் தெரிவித் துள்ளன.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வில், இந்த அலுவலகத்தை விரைவில் ஸ்தாபிக்குமாறு மனித உரி மைகளுக்கான உயர்ஸ்தா னிகர் ஸையத் ராத் ஹூ சைன் தெரிவித்திருந்தார்.
இதனை விரைவில் ஸ்தாபிக்குமாறு கோரி காணாமல் போனவர்களின் குடும்ப சங்கம் முதலான அமைப்புக்களும் ஆர்ப் பாட்டம் நடத்தியிருந்தன.
இந்த நிலையில் அலு வலகம் விரைவில் ஸ்தாபிக் கப்படுவது சிறப்பானதென காணாமல் போனவர்களது குடும்பங்கள் அங்கம் வகிக் கும் சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர் னாண்டோ தெரிவித்துள் ளார். (உ)

## மாவட்ட செயலக அணி
# தொடர் வெற்றி




மட்டக்களப்பு மாவட்ட செயலக கிரிக்கெட் அணி 13ஆவது தடவையாகவும் வெற்றி பெற்றுள்ளது.
அவர்கள் தமது வெற்றிக் கிண்ணத்தை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் இன்று கையளித்துள் ளனர். கடந்த 9 ஆம் திகதி இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட அரச மற் றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடை யிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மட்டக் களப்பு மாவட்ட செயலக அணி முதலாம் இடம் பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. மேலும் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ணத்துக்காக கடந்த 20ஆம் திகதி நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மாவட்ட செயலக கிரிக்கெட் அணியினர் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## விபத்தில் ஒருவர் மரணம்:
# தலைமறைவான சாரதி கைது



தலவாக்கலைப் பகுதியில் நேற்று மாலை வான் மோதி ஒருவர் பலியாகி யுள்ளார். இச் சம்பவத்தில் தலைமறைவான சாரதி நேற்று இரவு தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேக நபரையும், குறித்த வானையும் நுவரெலியா நீதி மன்றத்தில் இன்று ஆஜர்ப்படுத்த நடவ டிக்கைகள் மேற்கொள் ளப்பட்டிருப்பதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். தல வாக்கலைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தலவாக்கலை லிந்துலை நகரசபைக்கு அருகில் மஞ்சல் கோட்டைக் கடந்து கொண்டிருந்தவர் மீது வான் ஒன்று நேற்று மாலை 6.30 மணியளவில் மோதிவிட்டு சென்றுள் ளது. அவர் மரணமடைந் துள்ளதாகவும் சாரதி வானு டன் தலைமறைவாகியிருந் ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
இதில் மரணமடைந்த நபர் சுமார் 100 மீற்றர் தூரத் துக்கு இழுத்துச் செல்லப் பட்டுள்ளார். சம்பவத்தில் உயிரிழந்தவர் லிந்துலை கூம்வூட் பகுதியைச் சேர்ந்த சூசை சந்தனம் (வயது-58) என இனங் காணப்பட்டுள்ளார்.
சம்பவ இடத்தில் வானின் பாகங்களும், மரணமடைந் தவரின் குடையும் கிடந்தன. சந்தேக நபரை கைது செய்வ தற்காக பொலிஸார்பல்வேறு நடவடிக்கைகளை எடுத் திருந்தனர் இந்நிலையி லேயே சந்தேகநபர் லிந் துலை பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# கிழக்குப் பல்கலையில் சர்வதேச மாநாடு




கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டா வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு திரு கோணமலை கோணேஸ்வரபுரியில் அமைந்துள்ள வளாகத்தில் வளாக முதல் வர் டொக்டர் வீ.கனகசிங்கம் தலை மையில் நடைபெற்றது.திருகோண மலை வளாகத்தினால் ஏற்பாடு செய்யப் பட்ட மாநாடு நேற்று ஆரம்பமா கியது. மாநாட்டில்66 ஆய்வுக்கட்டுரை கள் துறைசார் ஆய்வாளர்களால் முன் வைக்கப்படவுள்ளதுடன் வேலை யில்லாப் பட்டதாரிகள் எதிர்நோக் கும் பிரச்சினைகளுக்கான காரணங் கள்- சமகால சமூக கலாச்சார பிரச் சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது. நேற்று ஆரம்பமான இம்மாநாடு இன்று மாலை நிறைவு பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல் லாகம, விஷேட அதிதியாகப் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலை வர் பேராசிரியர் மொஹான் டிசில்வா, கிழக்குப் பல்கலைக்கழக பிரதித் துணைவேந்தர் டொக்டர் கருணா கரன், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)

# மின் தடை

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோகம் மார்க்கங்களில் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக யாழில் சில பிரதேசங்களில் மின் தடை ஏற்படும்.
ஆஸ்பத்திரி வீதியிருலிருந்து வேம்படிச் சந்தி, சத்திரத்துச்சந்தி வரை, கந்தப்ப சேகரம் வீதி, மகாத்மாகாந்தி வீதி, முனிஸ்வரன் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதிச் சந்தியிருலிந்து வின்சர் சந்தி வரை, மின்சார நிலைய வீதி, பெரிய கடை வீதி, போதனா வைத்தியசாலை, யாழ் கொமர்ஷல் வங்கி, யாழ்.தேசிய சேமிப்பு வங்கி, யாழ் இங்கை வங்கி, ரில்கோ விடுதி, சுகா தாரத் திணைக்களம், காகில்ஸ் வூட்சிற்றி, யாழ். வைத்தியசாலை (3 மாடிக் கட்ட டத் தொகுதி), யாழ்விடுதி, பல்கலைக் கழக தங்கும் விடுதி ஆகிய இடங்க ளில் மின் தடைப்படும். காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை மின்தடங் கல் அமுலில் இருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

# பதில் பிரதம நீதியரசராக ஈவா வனசுந்தர பதவியேற்பு



உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி ஈவா வன சுந்தர பதில் பிரதம நீதியரசராக ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ செயல கத்தில் நேற்று மாலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இந்த நியமனம் நாளை முதல் அமுலுக்கு வருகின்றது.இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கலந்துகொண்டார். (உ)

## எந்தத் துறைமுகத்தையும்
# அரசாங்கம் விற்கவில்லை



நாட்டின் எந்தத் துறைமுகத்தையும் அரசாங் கம் விற்பனை செய்யத் தீர்மானிக்கவில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார். கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அரசாங்கம் எந்தத் துறைமுகத்தையும் குத்தகைக்கு வழங்கவும் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார். மக்கள்விடுதலை முன்னணி போலியான செய்திகளை பரப்ப முயன்று வருகிறது என்று குறிப்பிட்டார்.
மீனவர்களுக்கு எந்த நெருக்கடியும் ஏற்படாத வகையில் கடற்றொழிலை மேம்படுத்த அர சாங்கம் உயர்ந்த பட்ச நடவடிக்கை எடுத் துள்ளது. மீன்பிடித்தொழிலை மேம்படுத்து வதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலும் ஏற்பட மாட்டாது என்று அமைச்சர் இதன்போது சுட்டிக்காட் டினார். (உ)

## நாளை நாளும் கோளும்

15.09.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள்

| | | |
|---|---|---|
| தசமி மு.இ. 07.05 வரை | பூனர்பூசம் பி.இ. 03.32 வரை | சித்தயோகம் |
| இராகுகாலம் 10.33 - 12.03 | சுபநேரம் 06.03 - 07.33 | எமகண்டம் 03.03 - 04.33 |

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நன்மை | செலவு | இலாபம் | போட்டி | விவேகம் | தடங்கல் | அமைதி | பொறுமை | அன்பு | மகிழ்ச்சி | வெற்றி | இன்பம் |

எதிரொலி
Ethiroli

## கோர விபத்து




ஹம்பாந்தோட்டை - தங்காலை பிரதான வீதியின் நொட்டோல்பிட்டிய, மாரகொல்லிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் இன்று மதியம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சிறுவன் ஒருவனும் சிறுவனின் தந்தையும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்து ஒன்றும் முச்சக்கர வண்டியும் மோதிக்கொண்டத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. வேகமாக வந்த பேருந்து மற்றுமொரு வண்டியை முந்திச் செல்ல முயற்சித்த போது எதிரில் வந்த முச்சக்கர வண்டியில் மோதியுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**2005.09.14**

தென்னிந்திய நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

## வாகன விபத்து: சாரதி படுகாயம்



புத்தளம், பழைய மன்னார் வீதியில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் இன்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் வான் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்ததாலேயே விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வீதியின் பாலத்துக்குக் கீழாக வீழ்ந்துள்ள வான் கடும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்தவர் வனாதவில்லுவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. வான் விபத்துக்குள்ளான பகுதியிலிருந்து சிறிது தூரத்திலிருந்து குறித்த வர்த்தகர் காயங்களுடன் மீட்கப்பட்டு பொதுமக்களின் உதவியுடன் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ)

## கால்வாய் புனரமைப்பு



முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் மற்றும் வவுனிக்குளம் ஆகிய விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் வகையில் 20 கி.மீ நீளமான நீர்ப்பாசன கால்வாய் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. சுமார் 700 இராணுவ வீரர்கள் உள்ளிட்ட 200க்கும் அதிகமான பொதுமக்கள் குறித்த சிரமதானப் பணியில் அண்மையில் ஈடுபட்டனர்.

பருவமழை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனை புனர்நிர்மாணம் செய்யும் வகையில் 65ஆவது படைப்பிவினருடன் 9 விவசாய சங்க உறுப்பினர்கள் இணைந்து 20 கி.மீ. நீளமான நீர்ப்பாசன கால்வாயைப் புனர்நிர்மாணம் செய்துள்ளனர். (உ)

## யோசித ஆஜர்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச நிதி மோசடி விசாரணைப் பிரிவில் இன்று ஆஜராகியுள்ளார். காணி ஒன்றைக் கொள்வனவு செய்த விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (உ)

## நூல் அறிமுக நிகழ்வு

புதிய நீதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் சி.கா.செந்திவேல் எழுதிய "வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை" என்ற அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலின் அறிமுக நிகழ்வு புத்தூரில் நடைபெறவுள்ளது. புத்தூர் மேற்கில் அமைந்துள்ள கலைமதி மக்கள் மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. திரு கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையைத் திருமதி லதா உதயதீபன், நூல் அறிமுக உரையைச் சட்டத்தரணி சோ. தேவராஜா, நூல் மதிப்பீட்டு உரைகளை எழுத்தாளர் க. தணிகாசலம், த. நவதாஸனும் நிகழ்த்தவுள்ளனர். நூலாசிரியர் பதிலுரையைச்தோழர்சி.கா. செந்திவேல் வழங்குவார். (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழ்., கிளிநொச்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வரையிலான காலப்பகுதியில், 151 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்றும் அந்த கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், கூடுதலானவர்கள் பெண்கள் என்றும் அந்தக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் 40 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே அதிகமுள்ளதாக அந்த கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியான சூழலில் வாழமுடியாத நிலைமையின் காரணமாகவே, பெண்களில் பெரும்பாலானோர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தில், தன்னுடைய கணவன் மற்றும் உறவினர்கள் மரணமடைதல், சகல சொத்துகளும் யுத்தத்தில் நாசமடைதல் ஆகியனவே, இவ்வாறான நோக்கத்துக்கு அவர்களை இட்டுச்சென்றுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்தத்தால் ஏற்பட்ட மனவழுத்தத்துக்காக, ஓர் உளவியல் திட்டத்தை முன்னெடுப்பதற்கு, நடவடிக்கை எடுக்காமையும், இவ்வாறான நோக்கத்துக்கு அவர்களை இழுத்துச் சென்றுள்ளது என்றும் அந்தக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவ்விரு மாவட்டங்களிலும் உளவியல் திட்டமொன்றை உடனடியாக முன்னெடுப்பதற்கும் மற்றும் ஆலோசனை வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்தக் கணிப்பீட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (எ)

**காணாமல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார். இது தொடர்பாக அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தனது ருவிற்ரர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் அவர், "காணாமல் போனோர் பணியகம் நன்கு தகுதியான ஆணையாளர்களுடன் செயற்பட்டால், பதில்களைத் தேடும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கும் நம்பிக்கையை அளிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, "காணாமல் போனோர் பணியகம் செயற்படத் தொடங்குவது, வரவேற்கத்தக்க, முக்கியமான ஒரு நடவடிக்கை. நம்பகமான ஆணையாளர்களை விரைவாக சேர்த்துக் கொள்ள முடியும்" என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்புகிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. "இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு முக்கியமான, சாதகமான நகர்வு. அடுத்த கட்டம், ஆணையாளர்கள் மற்றும் செயற்படுதல்" என்று கனடா தெரிவித்துள்ளது. (எ)

**பிரிட்டனில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியாவின் பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சர்வதேச மனித உரிமைகள் சார்ந்த நிபுணர்களும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதன்போது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன், காணாமல் போனமைக்கான பொறுப்பாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற விடயமும் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

**பாதுகாப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் மாதம் 9ம் திகதி வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (எ)

**முடிவுகள்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை முடிவுடன் தொடர்புபட்டிருப்பதால் நாடாளுமன்ற குழுக் கூட்டம் கூடுவதற்கு முன்பாக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைக் கூட்டி அங்கத்துவக் கட்சிகளின் கருத்தறிந்து அதற்கேற்ப முடிவெடுப்பதே சிறப்பானதாக இருக்கும். ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் எட்டப்படுகின்ற முடிவுகளுக்கேற்ப நாடாளுமன்ற குழுவைக் கூட்டி அனைவரும் ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதே சரியானதாகவும் சிறந்த ஜனநாயக செயல்முறையாகவும் இருக்கும். ஆகவே, தாங்கள் விரைவாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை கூட்டுமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகிறது. - என்றுள்ளது. (எ)

**பல்கலை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகுந்த நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட வேண்டும் என மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்குவதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லை என அரச சட்டவாதி மன்றில் தெரிவித்ததை அடுத்து மன்றினால் பிணை வழங்கப்பட்டது.

குறித்த சந்தேகநபர்கள் ஐவரும் தலா இரண்டு இலட்ச ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் , தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசுப் பிணையிலும் , செல்ல மன்றினால் அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்று கையொப்பம் இட வேண்டும். வெளிநாடுகளுக்கு செல்வதற்கு தடை , கடவுசீட்டை நீதவான் நீதிமன்ற பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது. (எ-01)

**மன்னாரில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்து வழி பகுதியில் வீதிக்கு அருகில் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்த புனித அந்தோனியார் திருச் சொரூபமே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது கண்ணாடிப் பெட்டியை உடைத்து உள்ளே இருந்த புனித அந்தோனியாரின் திருச்சொரூபத்தை வெளியில் எடுத்து அதனை முற்றாக உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். இதேவேளை, மன்னார் - சிறுநீலா சேனை கிராமத்திலுள்ள புனித யாகப்பர் திருச்சொரூபம் நேற்று இரவு அடையாளம் தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டிருந்தது. (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.